# கரோனா தடுப்பூசிகளை விநியோகிக்க மிகப் பெரிய செயல் திட்டம்

சென்னை, ஜன. 4: நாடு முழுவதும் கரோனா தடுப்பூசிகளை விநியோகிக்க மிகப்பெரிய செயல்திட்டத்தை மத்திய அரசு முன்னெடுத்து வருவதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன் தெரிவித்தார்.

கரோனா பாதிப்புக்கு மட்டுமின்றி அனைத்து நோய்களுக்கும் உயர் சிகிச்சைகள் மக்களுக்கு கிடைப்பதை அரசு உறுதி செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 32-ஆவது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில், காணொலி முறையில் கலந்துகொண்ட மத்திய அமைச்சர் ஹர்ஷ்வர்தன், சிறப்பிடம் பெற்ற மாணவர்களைப் பாராட்டி கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து அவர் பேசியதாவது: கரோனா பெருந்தொற்று காலத்தில் வெற்றிகரமாக தங்களது பட்டப்படிப்புகளை நிறைவு செய்த மாணவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். இத்தகைய சவாலான சூழலிலும் மாணவர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்திய அவர்களின் பெற்றோருக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு ஆராய்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் ஸ்ரீ ராமச்சந்திரா கல்வி நிறுவனத்தின் செயல்பாடுகள் மெச்சத்தக்க வகையில் உள்ளன. பெருந்தொற்று தருணத்தில் அதற்கான தடுப்பூசிகளைக் கண்டறியும் ஆராய்ச்சிகளும் இங்கு நடைபெற்று வருவது பாராட்டுக்குரியது.

**மருத்துவ வசதிகள்-சவால்:** சுதந்திரத்துக்குப் பிறகு பல்வேறு சவால்களை இந்தியா சந்தித்து வருகிறது. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சிறந்த மருத்துவ வசதிகளையும், சுகாதாரக் கட்டமைப்புகளையும் உருவாக்கித் தருவது என்பது அதில் முக்கியமானதொரு சவாலாக உள்ளது. மத்திய அரசைப் பொருத்தவரை, இந்தியாவின் தற்போதைய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சதவீதத்தை சுகாதார வசதிகளுக்காக ஒதுக்கி வருகிறது. இது பிற வளர்ந்த நாடுகள் செலவிடும் தொகையைக் காட்டிலும் 18 சதவீதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

**இ-சஞ்சீவினி திட்டம் - 11 லட்சம் பேர் பலன்:** இதைத் தவிர, கரோனா காலத்தில், நாட்டில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் இணைய வழியே மருத்துவ ஆலோசனைகளை வழங்கும் இ-சஞ்சீவினி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் மூலம் 23 மாநிலங்களில் 11 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர். அதேபோன்று மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் 10.74 கோடி ஏழைக் குடும்பங்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு ரூ.5 லட்சத்துக்கு மருத்துவக் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர, நாடு முழுவதும் 1.5 லட்சம் மருத்துவ சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கரோனா பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தவும், தடுக்கவும், மருத்துவ உலகமும், முன்களப் பணியாளர்களும் அர்ப்பணிப்பு உணர்வோடு உழைத்து வருகின்றனர். நாட்டின் முதுகெலும்பாக தற்போது மருத்துவர்கள் உருவெடுத்துள்ளனர்.

கரோனா தடுப்பூசிகளைப் பொருத்தவரை அவற்றை விநியோகிக்க மிகப்பெரிய செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்றார் மத்திய அமைச்சர் ஹர்ஷ்வர்தன்.

இந்த நிகழ்வில் ஸ்ரீ ராமச்சந்திரா கல்வி நிறுவனங்களின் வேந்தர் வி.ஆர்.வெங்கடாசலம், இணை வேந்தர் செங்குட்டுவன், துணை வேந்தர் டாக்டர் விஜயராகவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மத்திய அமைச்சர் ஹர்ஷ்வர்தன்




ஸ்ரீ ராமச்சந்திரா உயர் கல்வி நிறுவனத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அறிவியலாளர் வி.பொன்ராஜுக்கு முனைவர் பட்டமளிக்கும் ஸ்ரீ ராமச்சந்திரா கல்வி நிறுவனங்களின் வேந்தர் வி.ஆர்.வெங்கடாசலம்.